4 ஆகஸ்ட் 2024
பொதுக்காலம் ஆண்டின் 18 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் **பணியாளர் தலைமைத்துவம்**

# தலைமைத்துவத்தில் நுண்ணறிவு

வட்டார மேய்ப்புப் பணி சபையாக அழைக்கப்பட்டு பின் தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு என மாற்றம் பெற்ற மாநாடு மெர்டெக்கா தினத்துக்கு முன்பாக நடைபெறவுள்ளது. மலேசிய திருஅவையோடு இணைந்து ஆயர்மாமன்றத்தைப் பற்றியக் கலந்துரையாடலையொட்டி, தலைமைத்துவத்தைப் பற்றிய நமது தனிப்பட்ட அணுகுமுறையைப் பற்றிச் சிந்திக்க இது ஒரு சரியான தருணம். ஒரு தலைவராக நம்மிடமிருந்தும், பிறரிடமிருந்தும் நாம் உண்மையில் என்ன எதிர்பார்க்கின்றோம்?



Image: https://www.freepik.com/author/stories/7#uuid=cf9690bf-89b6-49a4-97bb-e128d10dd306

பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்கள் உணவுப்பற்றாக்குறையைப் பற்றி மோசேயிடம் முறையிட்டார்கள். நாமும் மனித தலைவர்களின் தோல்வியைப் பற்றி முறையிட்டுள்ளோம். அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் அல்லது முயற்சிகளும் நேர்மறையான அல்லது எதிர்மறையான விவாதங்களையும் விமர்சனங்களையும் கொண்டுவரும். காரணங்கள் என்னவாக இருந்தாலும், அவர்கள் என்ன செய்யவேண்டும் அல்லது எப்படி செயல்படவேண்டுமென்பதில் நாம் அடிக்கடி ஒரு கருத்தைக் கொண்டிருப்போம். எப்படியிருந்தாலும் அவர்கள் 'பணிசெய்யும் தலைவர்கள்' என்ற எண்ணத்தோடு நம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இதே போல நற்செய்தியிலும் யூதர்கள் இயேசுவை தங்கள் அரசராக ஆக்குவதற்கு அவரிடம் சென்றார்கள். இயேசு அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்த்தாகள். இயேசு அவர்களின் எண்ணத்தை அறிந்தவராய், உண்மையில் கடவுளின் அரசுக்குரிய ஒருவராக எதிர்பார்ப்பதை விடுத்து, உலகத்தேவைகளை நிறைவுசெய்யக்கூடிய ஒரு தலைவரைத் தான் அவர்கள் தேடினார்கள். "நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல; மாறாக அப்பங்களை வயிறார உண்டதால் தான் என்னைத் தேடுகிறீர்கள்" மேலும் இயேசு அவர்களிடம் " அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்; அவ்வுணவை மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார் என்று கூறினார்.

எனவே இரண்டாம் வாசகத்தில் "கடவுளுடைய அரசை அடையவேண்டுமென்றால் தீயநாட்டங்களைக் களைந்துவிடுமாறும், நிலையான உணவைத் தரும் இயேசுவின் வார்த்தையை எதிரொலிக்குமாறும் பவுல் அழைப்பு விடுக்கிறார். நம்முடைய அன்றாட பரபரப்பான வாழ்க்கையில் சில சமயங்களில் தலைவர்களாகவும், பின்பற்றுபவர்களாகவும் இருக்கும் நாம், தற்காலிக விருப்பங்களை நிறைவேற்றிட உண்மையான, முக்கியமான, மற்றும் நிலையான பேரின்பத்தையும் மறந்துவிடுகின்றோம்.

நம்மைப் பற்றியும் நம் தலைவர்களிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதைப் பற்றியும் சிந்திக்க இந்த நேரத்தை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்வோம். வேறு யாராவது தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வரும்போது அதையும் குறைகூறக் காத்திருக்கிறோமா? நம்முடைய தலைவர்கள் கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப முடிவெடுக்கிறார்களா? அல்லது அவர்களின் விருப்பம் போல் செயல்படுகிறார்களா? இதற்கு நாம் எவ்வாறு ஒத்துழைக்கமுடியும்? "வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல; வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே" என்ற இயேசுவின் வார்த்தைகளை நாம் நினைவுக்குக் கொண்டுவருவோம்.

**ஒரு நல்ல தலைவர் மற்றவர்களிடமும் தலைமைத்துவத்தை வளர்ப்பார்.**

திருத்தந்தை பிரான்சிஸ்







**இன்றைய இறைவார்த்தை:**

விப: 16: 2-4, 12-15

திபா: 78: 3-4, 23-25,54

எபே: 4: 17, 20-24

யோவான் : 6: 24-35

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org